**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி.

**ந.க.எண். 023896 /எச்.1/2021** **நாள் : 08.12.2021**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – 2021–2022ஆம் கல்வி ஆண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – மாணவர்களது பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் – சார்பு

-----

2020–2021ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியலினை (Nominal Roll) அடிப்படையாகக் கொண்டு, 2021–2022ஆம் கல்வி ஆண்டிற்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது. எனவே, இது குறித்தான பின்வரும் அறிவுரைகளை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் **10.12.2021 முதல் 15.12.2021** வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று, தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி 2021–2022ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள தங்களது பள்ளி மாணவர்களின் நிரந்தரப் பதிவெண், பெயர், பிறந்த தேதி, பாடத்தொகுதி, பெற்றோரின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய பட்டியலை **பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.**

1. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர் விவரம் அடங்கிய பட்டியலில், தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணவர்களது பெயர், பெற்றோர் / பாதுகாவலர் பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் (Initial and Spelling Mistake only) புகைப்படம் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின், அதன் விவரங்களை பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகலுடன் இணைத்து **15.12.2021** தேதிக்குள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் **ஒப்படைக்க வேண்டும். பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அடிப்படையில் மட்டுமே பெயர் மற்றும் பிறந்த தேதி திருத்தம் மேற்கொள்ளப்படும்.**

**...2...**

2. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்து பெயர் மாற்றம் செய்த மாணாக்கர்களுக்கு மட்டும், பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்துக் கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வகை மாணாக்கரது பெயர் திருத்தம் கோர அரசிதழின் நகலை கண்டிப்பாக முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. மாணவரது பெற்றோர் பெயருக்கு பதிலாக பாதுகாவலர் பெயரை மதிப்பெண் சான்றிதழில் பதிய வேண்டும் எனில், G.R. எண், நிரந்தரப்பதிவெண், பாதுகாவலர் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உள்ளிட்ட விவரங்களை முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு **22.12.2021**–க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர் விவரம் அடங்கிய பட்டியலில், மாணவர் பெயர், பெற்றோர் / பாதுகாவலர் பெயர் அல்லது தலைப்பெழுத்து விடுபட்டிருப்பின் / தமிழில் தவறாக இருப்பின் அதனை முழுமையாக நீக்கம் (Delete) செய்து, மீண்டும் Unicode font-இல் சரியான பெயரை தமிழில் தட்டச்சு செய்தால் மட்டுமே இதனை சரி செய்ய இயலும்.

5. மாணவரது பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அம்மாணவருக்கு பெயர்ப்பட்டியலில் வழங்கப்பட்டுள்ள G.R. எண் / நிரந்தரப் பதிவெண் குறிப்பிட்டு திருத்தங்கள் குறித்த விவரங்களை மேற்கொள்ள வேண்டும்.

6. 2020–2021ஆம் கல்வி ஆண்டில் ஒரு பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று, பின்னர் வேறொரு பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பில் (+2) சேர்ந்து பயிலும் மாணவரது பெயரை, தற்போது பன்னிரெண்டாம் வகுப்பு (+2) பயிலும் பள்ளியில் மாணாக்கர் பெயர் பட்டியலில் சேர்க்க இயலும். அம்மாணவர் **ஏற்கனவே +1 பயின்று தேர்வெழுதிய பாடத் தொகுப்பு, பயிற்று மொழி மற்றும் மொழிப்பாடம் ஆகியவற்றில் எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது.**

7. **மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று +1 தேர்வெழுதிய பள்ளி மாணாக்கரது பெயரை +2 தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியலில் இருந்து எக்காரணம் கொண்டும் நீக்கம் (Deletion) செய்திட அனுமதி வழங்கப்படாது. பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வழங்காமல் நீண்ட காலம் விடுப்பில் இருக்கும் மாணாக்கரது பெயரை, பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கம் (Deletion) செய்யக் கூடாது.** மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே பெயர்ப்பட்டியலில் மாணவரது பெயரை நீக்கம் செய்ய வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலரிடம் அதற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**...3...**

8. பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மற்றும் சேர்க்கை (By Transfer) போன்றவற்றினை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பான விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

9. மேல்நிலை முதலாமாண்டு பயின்று பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்று / பெறாமல் இடைநின்று தற்போது மீண்டும் பள்ளியில் சேர்ந்து மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்று வரும் மாணவர்களின் பெயரினை 2021–2022–ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பெயர்ப்பட்டியலில் சேர்த்திட இயலாது.

10. மேலும், வேறு மாநிலத்தில் பதினோராம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மத்திய இடைநிலைக் கல்வி வாரிய (CBSE) பாடத்திட்டத்தில் பதினோராம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தற்போது தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்றால் அம்மாணக்கரின் பெயரினை மார்ச் 2022 மேல்நிலை இரண்டாமாண்டு பெயர் பட்டியலில் சேர்த்திட இயலாது.

எனவே, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேல்நிலை பள்ளிகளில் பயிலும் வ.எண் 9 & 10 வகையைச் சார்ந்த மாணவர்களின் பெயரை 2022 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுக்கான பெயர்ப்பட்டியலில் சேர்க்க வேண்டுமெனில், அம்மாணாக்கரது மேல்நிலை முதலாமாண்டு (+1) மதிப்பெண் பட்டியல் (Statement of Marks), தற்போது +2 பயிலும் பள்ளியின் எண், பள்ளித் தலைமையாசிரியரின் கடிதம் ஆகியவற்றை இணைத்து **22.12.2021**–ஆம் தேதிக்குள் திருமதி.கு.ஜெயஸ்ரீ, துணை இயக்குநர் (மேல்நிலை), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 என்ற பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேல்நிலை பள்ளிகளில் இருந்து 2022 மேல்நிலை இரண்டாமாண்டு பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் கோரி பெறப்படும் விவரங்களை **15.12.2021 முதல் 18.12.2021** வரையிலான நாட்களில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐக்கொண்டு இணையதளம் (www.dge.tn.gov.in) வழியாக பதிவேற்றம் செய்துக் கொள்ளலாம். தங்களது அலுவலகத்தில் பெறப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ள திருத்தங்களை **பதிவேற்றம் செய்வதற்கு முன்னர்** மாணவர்களின் **நிரந்தர பதிவெண்ணை (Permanent Register Number) சரியாக உள்ளதா என்பதை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிவேற்றம் செய்து** அனைத்து திருத்தங்களும் மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு கீழ்க்காணும் கைப்பேசி எண்ணை தொடர்பு கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**கைப்பேசி எண். 9498383073 /**
**9498383081**

**ஒம்./–**
**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

} தகவலுக்காக